தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் தொல்லியல் அருங்காட்சியகம் அடிக்கல் நாட்டு விழாவில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை தாங்கினார். தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னிலை வகித்தார். அருகில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் மரு.கி.செந்தில்ராஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

“நான் முதல்வன்” திட்டத்தின் கீழ்

ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.7,500 ஊக்கத் தொகை!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, ஆக.6-

கல்லூரி மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் “நான் முதல்வன்” திட்டம், போட்டித் தேர்வு மாணவர்களுக்கு உதவும் வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு முன்னெடுப்பைத் செய்துள்ளது.

குடிமைப்பணி தேர்வுகளுக்குத் தயாராகும் தமிழ் நாட்டு மாணவர்களுக்கு உதவும் நோக்கில், 2023-24-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாகத் தேர்வு செய்யப்படும் 1,000 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.7,500 வழங்குவதற்கான சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், முதல்நிலைத் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குத் தயாராவதற்காக ரூ.25,000 ஊக்கத்தொகையும் வழங்கப்படும். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதோடு அவர்களது செலவுகளைக் குறைக்கும் நோக்கத்தோடும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஐ.ஏ.எஸ். ஆர்வலர்களுக்கான இந்த மாதாந்திர ஊக்கத்தொகைத் திட்டமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்படும். கடந்த சில ஆண்டுகளாக, ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறும் தமிழ்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவருவதைக் கருத்தில் கொண்டு அகில இந்திய போட்டித் தேர்வுகளில் மீண்டும் தமிழ் நாட்டை முன்னிலைக்குக் கொண்டுவருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியும் பாடக்குறிப்புகளும் கிடைப்பதை இத்திட்டம் உறுதிசெய்ய முனைந்துள்ளது.

மதிப்பீட்டுத் தேர்வை எழுத ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்ச வயது 21. பொதுப் பிரிவினருக்கான அதிகபட்ச வயது 32. பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட பிரிவினருக்கும் சீர்மரபினருக்கும் அதிகபட்ச வயது 35, பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் அதிகபட்ச வயது 37, மாற்றுத்திறனாளிகள் 42 வயதைக் கடந்திருக்கக்கூடாது. ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான வயது வரம்பின் அடிப்படையில் மதிப்பீட்டுத் தேர்வுக்கான வயது வரம்பு நிர்ண யிக்கப்பட்டுள் ளது.

மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாக தேர்வுசெய்யப் பட உள்ள 1,000 மாணவர்களில் 21-22 வயது கொண்ட புதிய ஆர்வலர்கள் 50 பேருக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். பட்டப்படிப்பின் போதே, போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு மிகப்பெரிய பயனளிக்கும். மருத்துவம், கால்நடை அறிவியல் மற்றும் ஒருங்கிணைந்த பட்டப் படிப்பு மாணவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். என்றாலும், அதுகுறித்து திறன் மேம்பாட்டுக் கழகமே முடிவு செய்யும். மதிப்பீட்டுத் தேர்வுக்கு https://nmcep.tndge.org/apply_now என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கக் கடைசி நாள், 17.08.2023.

10.09.2023 அன்று முற்பகல் தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் மதிப்பீட்டுத் தேர்வு நடைபெறவுள்ளது. சரியான விடைகளைத் தேர்வு செய்யும் வகையில் 150 கேள்விகளைக் கொண்டதாக இத்தேர்வு அமையும். 100 கேள்விகள் பொது அறிவு பிரிவிலிருந்தும் 50 கேள்விகள் சிசாட் எனப்படும் குடிமைப் பணித் தேர்வுகளுக்கான திறனறிவு பிரிவிலிருந்தும் கேட்கப்படும். தவறான கேள்விகளுக்கு எதிர்மறை மதிப்பெண்கள் கிடையாது. வினாத்தாள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும். தேர்வுக்கான கால அளவு, 3 மணி நேரம்.

இத்தேர்வில் முதலிடம் பிடிக்கும் 1,000 மாணவர்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்படும். இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும். இந்த மதிப்பெண் பட்டியலிலிருந்து சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் இயங்கிவரும் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சித் தேர்வு மையம், கோயம்புத்தூரிலும் மதுரையிலும் இயங்கிவரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணி பயிற்சி நிலையங்களுக்கும் சேர்க்கை நடைபெறும். சென்னை பயிற்சி மையத்தில் 225 மாணவர்களுக்கு உண்டு உறைவிட வசதியுடன் முழுநேரப் பயிற்சியும் 100 மாணவர்களுக்குப் பகுதிநேரப் பயிற்சி யும் அளிக்கப்பட்டுவருகிறது. கோயம்புத்தூர், மதுரை பயிற்சி நிலையங்களில் தலா 100 மாணவர்களுக்கு முழுநேரப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தை நடத்தி வரும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, டி.என்.பி.எஸ்.சி., எஸ்.எஸ்.சி., சீருடைப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கும் உதவும் வகையில் இணையம் வழியாகப் பயிற்சியளித்து வருவது குறிப்பிடத்தக்கது. AIM TN என்ற யூடியூப் தளத்தில் இந்தப் பயிற்சிக் காணொளிகள் பார்க்கக் கிடைக்கின்றன.

இது தவிர வங்கித் துறை, ரயில்வே துறை, எஸ்.எஸ்.சி. உள்ளிட்ட ஒன்றிய அரசின் மற்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் கட்டணமில்லாப் பயிற்சித் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 5000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கட்டணமில்லா பயிற்சி, பாடநூல்கள், வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐ.ஏ.எஸ். தேர்வுகளுக்கு ஊக்கத்தொகையுடன் பயிற்சி, எஸ்.எஸ்.சி. தேர்வுகளுக்கு இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் சிறப்புக் கவனம், ஊரக மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் வல்லுநர்களின் காணொளி வகுப்புகள் என்று போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு ஏற்ற ஒரு சூழலைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அரசுப் பணிகளின் வாயிலாக நாடு முழுவதும் தமிழ்நாட்டின் முத்திரை யைப் பதிக்க கல்லூரி மாண வர்கள் தயாராக வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், விழுப்புரம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.21/2023-2024/தவஅ/நாள்-02.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, விழுப்புரம் வட்டம் அவர்களால், **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24**–ன் கீழ் **விழுப்புரம் (நெ) க(ம)ப கோட்டத்தில் (VPM-072)** ஒரு பணிக்கு இணையவழியில் ஒரு உறை முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **28.08.2023, 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **11.08.2023** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4308/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், விழுப்புரம்

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”

நீலகிரி மாவட்டம், அதிகரட்டி தேர்வுநிலை பேரூராட்சியில் வளம் மீட்பு பூங்காவில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். உடன் அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

3 ஏக்கர் நிலப்பரப்பில்

ஆதிச்சநல்லூரில் உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகப் பணிகள்!

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் - கனிமொழி கருணாநிதி எம்.பி. துவக்கி வைத்தனர்!

தூத்துக்குடி, ஆக. 6-

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் உலக தரம் வாய்ந்த அருங்காட்சியகத்திற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், கனிமொழி கருணாநிதி எம்.பி ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அருகே உள்ள ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படவேண்டும் என தி.மு.க. சார்பில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டு வந்தது. இதனையடுத்து, ஆதிச்சநல்லூரில் உலகத் தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று கடந்த 2020ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன் ஒரு பகுதியாக ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு மத்திய தொல்லியல் துறை சார்பில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின.

அகழாய்வில் 100க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள், இரும்பு பொருட்கள், தங்க நெற்றி பட்டயம், சங்ககால வாழ்விடம் பகுதிகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. இதனிடையே, மண்பாண்டப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை அந்த இடத்தில் உள்ள நிலையிலேயே பார்வையிடுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ள ஆன்சைட் மியூசியம் திறப்பு விழா மற்றும் ஐந்து ஏக்கர் பரப்பளவில் உலகத் தர வாய்ந்த அருங்காட்சியகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில் ஒன்றிய நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு ஆன் சைட் மியூசியத்தைத் திறந்து வைத்து அதனைப் பார்வையிட்டனர்.

நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டும் நிறைவேற்றப்படாத நிலையில்

கைத்தறி நெசவாளர்கள் வாழ்வாதாரத்துக்கு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக. 5

தொழில்துறையின் நவீன மாற்றங்களால் நசிந்து வரும் பாரம்பரிய கைத்தறி நெசவுத்தொழிலை பாதுகாக்கும் வகையில், அத்தொழிலில் ஈடுபட்டு வரும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒன்றிய அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவிப்பு செய்துள்ளது. ஆனால், அவை நிறைவேற்றப்பட்டுள்ளதா என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் வருமாறு:

(அ) கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அரசு கவனத்தில் கொண்டுள்ளதா;

(ஆ) அப்படியானால், அதன் விவரங்களை அளிக்கவும். கைத்தறி நெசவாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அரசால் தீர்க்க முடியாமல் போனதற்கான காரணங்கள் இருந்தால் அது பற்றியும் குறிப்பிடவும்.

(இ) கைத்தறி நெசவாளர்களுக்காக வகுக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களை,

அவை குறித்த போதுமான அடிப்படைத் தரவுகள் இல்லாதது மற்றும் பொருத்தமற்ற செயல்முறைகள் ஆகிய காரணங்களால் நிறைவேற்ற இயலவில்லையா, அவ்வாறாயின் அதன் விவரங்களை தெரிவிக்கவும்;

(ஈ) இவ்விஷயத்தில் அறிவியல் பூர்வமான அணுகுமுறைகளை கடைப்பிடிக்க ஒன்றிய அரசு உத்தேசித்திருந்தால் அதன் விவரங்கள் பற்றி தெரிவிக்கவும்;

(உ) நெசவாளர்கள் தங்கள் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான வசதிகளை அளிப்பதில் ஏதாவது திட்டங்கள் நிறைவேறியுள்ளதா, அந்த வகையில் மாநில வாரியாக கடந்த மூன்று ஆண்டுகளில் பயனடைந்த நெசவாளர்களின் மொத்த எண்ணிக்கை பற்றி குறிப்பிடவும்;

(ஊ) கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி மற்றும் மில் தயாரிப்பு போன்ற தொழில் போட்டிகளை எதிர்கொண்டு வரும் நிலையில் கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய ஜவுளித் துறை இணையமைச்சர் ஸ்ரீமதி தர்ஷனா ஜர்தோஷ் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

(அ) மற்றும் (ஆ): நாடு முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும், கைத்தறித் தொழிலாளர்களின் நலனுக்காகவும் மத்திய ஜவுளி அமைச்சகம் பின்வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. தேசிய கைத்தறி மேம்பாட்டு திட்டம்;

2. மூலப்பொருட்கள் வழங்கும் திட்டம்

மேற்கண்ட திட்டங்களின் கீழ், தகுதி வாய்ந்த கைத்தறி முகமைகள் மற்றும் நெசவாளர்களுக்கு மூலப்பொருட்கள் வாங்குதல், கைத்தறிகளுக்கான தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உபகரணங்கள் வாங்குதல், சூரிய ஒளி விளக்குகள் அமைத்தல், தறிக்கூடங்கள் அமைத்தல், உற்பத்தி மற்றும் வடிவமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பொது உள்கட்டமைப்பு வசதி, கைத்தறி தயாரிப்புகளை உள்நாட்டு / வெளிநாட்டு சந்தைகளில் சந்தைப்படுத்துதல், நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் சலுகை கடன்கள் மற்றும் சமூக பாதுகாப்பு ஆகிய நிலைகளில் நிதி உதவிகள் வழங்கப்படுகிறது.

(இ): கைத்தறி நெசவாளர்கள் தொடர்பான அடிப்படைத் தரவுகள் 2019-20-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட 4-வது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பில் பெறப்பட்டுள்ளன.

(ஈ) கைத்தறி நெசவாளர்களுக்கு நேரடி பணப் பரிமாற்றம் (டி.பி.டி), கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு இசந்தை (ஜி.இ.எம்), Indiahandmade.com போன்ற கைவினைப் பொருட்களின் விற்பனைக்கான இணைய தளம் ஆகியவற்றின் மூலம் நன்மைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அறிவியல் பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றி, நெசவாளர்களின் தயாரிப்புகளுக்கு லாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(உ) கைத்தறி முகமைகள் மற்றும் நெசவாளர்கள் தங்கள் தயாரிப்புகளை வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்காக தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் (என்.எச்.டி.பி) ஒரு அங்கமாக கைத்தறி சந்தைப்படுத்தல் உதவி (எச்.எம்.ஏ) திட்டத்தை ஜவுளி அமைச்சகம் நாடு முழுவதும் செயல்படுத்தி வருகிறது.

கடந்த மூன்றாண்டுகளில் கைத்தறி விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பயனடைந்த நெசவாளர்களின் எண்ணிக்கை மற்றும் மாநில வாரியான விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

கைத்தறித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க, மத்திய அரசு கைத்தறி (உற்பத்திக்கான பொருள்கள் ஒதுக்கீடு) சட்டம், 1985ஐ அறிவித்துள்ளது. கைத்தறியில் உற்பத்தி செய்வதற்காக சில தொழில்நுட்ப விவரக் குறிப்புகள் கொண்ட 11 ஜவுளி தயாரிப்புகள் பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி, பூண்டி ஒன்றியத்தில் பென்னலூர் பேட்டை, அம்மம்பாக்கம், மெய்யூர் மற்றும் போந்தவாக்கம் அரசு மேநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு 227 விலையில்லா மிதி வண்டிகளை மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன்; வழங்கி சிறப்புரையாற்றினர். உடன். டி.கே.சந்திரசேகர், ஜான்(எ) பொன்னுசாமி. ஜெ.மூர்த்தி, ஏ.வி.ராமமூர்த்தி, எஸ்.ரமேஷ், மு.பாஸ்கரன், கா.சு.ஜெகதீசன், இரா.அறிவழகன், எம்.ஆர்.ஸ்ரீதர், பா.தனசேகரன், பி.சிவய்யா, வேணு, எஸ்.லாவண்யா, நளாயினி வேல்முருகன், எஸ்.வெஸ்லி, பாலாஜி, ரகு, சீனிவாசுலு, என்.எம்.சுப்பரமணி, ஆசிரியர் கஜேந்திரன், விஜயமாலா, பாஸ்கரன், பரந்தாமன், விஜயன், பிரபாகரன், சரசுபூபாலன், சித்ராபாபு, டி.சங்கர், கோல்டு மணி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.